www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 035
07 செப்டம்பர் 2010
தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# இந்தியாவின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கே.பி.ரெஜி! திடுக்கிடும் ஒலிப்பதிவு அம்பலம்!!




தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும், கே.பி என்றழைக்கப்படும் தம்பியையா செல்வராஜா பத்மநாதனால் உருவாக்கப்பட்ட காகிதப்புலிகளின் தலைமைச் செயலகத்தின் செயலாளராகவும் விளங்கும் காந்தலிங்கம் பிரேமரெஜி என்றழைக்கப்படும் அறிவன் அல்லது கே.பி.ரெஜி இந்தியாவின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்குவது எமது ஊடகப் புலனாய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கே.பி.ரெஜியின் நடவடிக்கைகள் தொடர்பாக பல தரப்புக்களிடமிருந்தும் எமது ஆசிரியர் பீடத்திற்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை அடுத்து, இவரது தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்குமாறு எமது ஊடகப் புலனாய்வாளர்களிடம் பணித்திருந்தோம். இதனையடுத்து கே.பி.ரெஜியின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்ட எமது ஊடகப் புலனாய்வாளர்கள், இந்தியாவின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கே.பி.ரெஜி இயங்குவதை உறுதி செய்யும் ஒலிப்பதிவு வடிவத்தை எம்மிடம் கையளித்துள்ளனர்.

சிங்கள-இந்திய அரசுகளின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் கே.பி குழுவினரையும், அவர்களின் சகபாடிகளான காகிதப்புலிகளையும் தமிழ்த் தேசிய ஊடகங்கள் அம்பலப்படுத்துவதையிட்டு காகிதப்புலிகளின் தலைவர் இராமு.சுபனிடம் அதிருப்தி வெளியிடும் கே.பி.ரெஜி, தனது உரையாடல்கள்கூட ஒட்டுக்கேட்கப்பட்டு இணையத்தளங்களிலும், மக்களிடமும் வெளியிடப்படும் அபாயம் நிலவுவதாக அச்சம் வெளியிடுகின்றார்.

இந்தியாவுடன் தானும் தனது சகபாடிகளும் நாள்தோறும் தொடர்பாடல்களைப் பேணி வருவதை ஒப்புக்கொள்ளும் கே.பி.ரெஜி, தமிழ்த் தேசிய ஊடகங்களின் செயற்பாடுகளை தடுத்து நிறுத்த முடியாததையிட்டு இந்தியாவிற்கு விளக்கமளிப்பதற்கு தான் திண்டாடுவதாகவும் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு தமிழ்த் தேசிய ஊடகங்கள் செயற்படுவதற்கு இனியும் இடமளிக்க முடியாது என்று கூறும் கே.பி.ரெஜி, கடும் அழுத்தங்களைப் பிரயோகித்து சங்கதி, பதிவு, ஈழமுரசு போன்ற ஊடகங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும் என்றும் தெரிவிக்கின்றார்.

இவ்வாறான ஊடகங்களைக் கைப்பற்றித் தன்னிடம் கையளித்தால், இந்தியாவின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அவற்றைத் தன்னால் இயக்க முடியும் என்றும், காகிதப்புலிகளின் தலைவர் இராமு.சுபனிடம் கே.பி.ரெஜி கூறுகின்றார்.

கே.பி.ரெஜியின் துரோகத்தனமான உரையாடலின் ஒலிவடிவத்தை இத்துடன் உலகத் தமிழ் உறவுகளின் கவனத்திற்காக இணைத்துள்ளோம்.

கடந்த 2005ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகளுக்கான விசாவுடன் பிரித்தானியாவை வந்தடைந்த கே.பி.ரெஜி அதன் பின்னர் நாடு திரும்புவதை தவிர்த்து வந்ததோடு, அவரது முட்டாள்தனமான முடிவுகளால் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கென உலகத் தமிழர்களால் வழங்கப்பட்ட பல நூறு கோடி ரூபா நிதி சிங்கள அரசால் கையகப்படுத்தப்பட்டிருந்தது.

இதன்பின்னர் கே.பி.ரெஜிக்கு பிடியாணை பிறப்பிக்கும் உத்தரவு கொழும்பு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டு, கடந்த ஆண்டு இன்ரர்போல் அமைப்பால் தேடப்படும் நபராக இவர் அறிவிக்கப்பட்டிருந்தார்.

இதனை தொடர்ந்து இலண்டனில் இவரை கைதுசெய்வதற்கான பிடியாணையை இன்ரர்போல் பிறப்பிக்க முற்பட்ட பொழுது, இந்திய தூதரகத்தின் உயர் அதிகாரி ஒருவரின் தலையீடு காரணமாக இறுதிநேரத்தில் இது தடுத்து நிறுத்தப்பட்டது.

இந்தியாவின் உதவியுடன் கே.பி (தம்பியையா செல்வராஜா பத்மநாதன்) ஊடாக தற்பொழுது சிங்கள அரசுடன் சமரசம் செய்திருக்கும் கே.பி.ரெஜி, சிங்கள அரசிடம் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியை கே.பியின் நேர்டோ என்ற அமைப்பிடம் கையளிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

இது தொடர்பாக சிங்கள அரசுடன் பேச்சுவார்த்தைகளை நிகழ்த்தும் நிமித்தம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் டொக்டர் புவியை கொழும்புக்கு கே.பி.ரெஜி அனுப்பி வைத்திருந்தார்.

எமது ஊடகப் புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின்படி, டொக்டர் புவியையும், அதன் பின்னர் வெளிநாடுகளில் இருந்து கே.பியை சந்திப்பதற்காக கொழும்பு சென்ற ஒன்பது பேர் கொண்ட குழுவினரையும் அனுப்பியதன் பின்னணியில் கே.பி.ரெஜியே இருந்ததாக தெரியவருகின்றது.

2008ஆம் ஆண்டு இவரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வன்னிக்கு வருமாறு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் அழைத்த பொழுது, தனது கடவுச்சீட்டு பிரித்தானிய உள்துறை திணைக்களத்தினரால் தடுத்து வைக் கப்பட்டிருப்பதாக கே.பி.ரெஜி பொய்யு ரைத்திருந்தார். இதன் பின்னர் வணங் காமண் கப்பலில் ஏறி வருமாறு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் கேட்ட பொழுதும், மீண்டும் அதே கதையைக் கூறிய கே.பி.ரெஜி, மார்ச் மாத இறுதியில் வன்னியை சென்றடைய வேண்டிய வணங்காமண் கப்பலை திட்டமிட்ட வகையில் மே 20ஆம் நாள் வரை செங்கடலில் முடக்கி வைத்து, முள்ளிவாய்க்காலில் சிங்களப் படைகளால் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் உட்பட்ட முக்கிய தளப திகளும், பொறுப்பாளர்களும் படு கொலை செய்யப்பட்ட செய்தி உறுதி செய்யப்பட்ட பின்னரே அரபிக்கடல் நோக்கிப் பயணிக்குமாறு கப்பலின் கப்ட னுக்குப் பணித்திருந்தார்.

இதனிடையே முள்ளிவாய் க்காலில் இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் இந்தியாவின் உதவியுடன் சிங்களப் படைத் தளப திகளுடன் தொடர்பை ஏற்படுத்திய கே.பி.ரெஜி, தனது மனைவியையும் பிள்ளைகளையும் பத்திரமாக மீட்டு தற்பொழுது வெளிநாட்டில் பராமரித்து வருகின்றார்.

இலண்டனில் வசித்து வரும் கே.பி.ரெஜியின் கட்டுப்பாட்டின் கீழ் இலண்டனுக்கு வெளியேயுள்ள பகுதி களில் பல எரிபொருள் நிரப்பும் நிலை யங்களும், தென்மேற்கு இலண்டனில் பல கடைகளும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய ஒன்றியத்தை நோக்கி ஜெனீவாவிலிருந்து மூன்று ஈழ உணர்வாளர்களின் மனிதநேய நடைப்பயணம்




### WALK FOR JUSTICE GENEVA TO BRUSSELS

சுவிஸ் ஜெனிவாவிலுள்ள ஈகைப்பேரொளி முருகதாசன் திடலிலிருந்து மூன்று தமிழீழ உணர்வாளர்கள் தன்னெழுச்சியாக முன்வந்து புருசலிலுள்ள ஐரோப்பிய பாராளுமன்றம் நோக்கி மனிதநேய நடைப்பயணமொன்றை ஆரம்பித்துள்ளனர். மனிதநேயன் சிவந்தன் கடந்த ஜீலை 23 ஆம் திகதி பிரித்தானியாவிலிருந்து நடைப்பயணமொன்றை ஆரம்பித்து இம்மாதம் 20ஆம் திகதி முருகதாசன் திடலில் தனது பயணத்தின் கோலை விட்டுச்சென்றார். அதன் தொடர்ச்சியாக ஒரு வார இடைவெளியின் பின் அடுத்தகட்டபயணம் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. முருகதாசன் உட்பட 18 தியாகிகளின் நினைவாக நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டு நடைபயணம் ஆரம்பமானது. எதிர்வரும் 26.09.2010 அன்று தியாகதீபம் திலீபன் நினைவு நாளன்று இம்மூன்று ஈழஉணர்வாளர்களும் புருசலைச் சென்றடைவர். இவர்கள் சென்றடைவதை முன்னிட்டு எதிர்வரும் 27.09.2010 புருசலில்அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றம் முன்பாக மாபெரும் எழுச்சிக் கவனயீர்ப்பும் மனுக்கையளிப்பும் இடம்பெறவுள்ளது.

.இலங்கை அரசு மீது ஐ.நா. சுயாதீன போர்க்குற்ற விசாரணை மேற்கொள்ளவேண்டும்.அதற்கு ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

.எமது பெண்கள் சிறுவர்கள் மீது அநீதியிழைத்த சீறீலங்கா அரசு மீது சர்வதேச நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்படவேண்டும். அத்துடன் சிறைகளில் தவிக்கும் தமிழ்அரசியல் கைதிகள் விடுவிக்கப்படு-மனித உரிமைகள் மதிக்கப்படும் வரை சீறிலங்கா அரசை அனைத்து நாடுகளும் புறக்கணிக்கவேண்டும்.

.தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்.

போன்ற கோரிக்கைகளை ஒட்டுமொத்த தமிழ்மக்களின் சார்பாகவும் முன்வைத்தே இம் மனிதநேய நடைபயணம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**திரு.ஜெகன்(62)அவுஸ்திரேலியா, திருமதி. தேவகிகுமார்(36)சுவிஸ், திரு.வினோத்(48)பிரான்ஸ்,** ஆகிய உணர்வாளர்களே இப்பயணத்தை முன்னெடுத்துள்ளனர். அந்தந்த பிரதேசங்களில் வாழும் மக்கள் இணைந்து நடந்து தமது ஆதரவை தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**12.09.2010** ஞாயிறுஅன்று **Saarland** மாநிலஎல்லை நகரங்களான
**Saarbrücken,Völklingen,Saarlious,Dillingen,Merzig, Mettlach,Orschholz,Nennig**
ஊடாகவும் நடைப்பயணம் தொடரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்!



யேர்மனியில் உள்ள அனைத்து தமிழ் மக்களையும் நடைபயணம் மேற்க்கொள்ளும் உணர்வாளர்களை வந்து சந்தித்து அவர்களுக்கு ஆதரவு வழங்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

**சமஉரிமைக்கான தமிழர் மையம் - யேர்மனி**

# வர்த்தக விளம்பரங்கள் மற்றும் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்